Vlambaram -November 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-03 5:58 PM Page 1






35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2025

# ஒன்ராறியோவில் முதலீடு செய்வதற்கான சூழலை அரசு உருவாக்கியுள்ளது

ஒன்ராறியோ சட்டசபை கடந்த வசந்த காலத்தில் 23நாள் அமர்வின் பின்னர் ஜூன் மாதத்தில் ஒத்திவைக்கப்பட்டது. அதன்பின்னர், 28நாள் அமர்விற்காக ஒன்றாரியோ மாகாண சட்டசபை உறுப்பினர்கள் 2025 ஒக்ரோபர் 20ஆம் திகதி சட்டசபைக்கு சமூகமளித்தனர். மாகாண அரசு சட்டசபையை மீளத் தொடங்குவதை ஒரு மாதகாலம் தாமதித்தபடியால் இம் முறை நடைபெறும் அமர்வும் ஒரு குறுகிய கால அமர்வாகவே இருக்கப்போகிறது.

டக் ஃபோர்ட்டின் பழமைவாதக்கட்சி அரசிற்கு பல விடயங்களை இக்குறுகிய காலத்தில் நிறைவேற்ற வேண்டியிருப்ப தால் இவ் அமர்வில் பல புதிய மசோதாக்கள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கலாம் என CBC ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் சுங்கவரிகளால் ஒன்றாறியோவில் உருவாக் கப்பட்ட பொருளாதார நிச்சயமற்ற தன்மையை நிவர்த்தி செய்யப் பல புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த உள்ள தாக தற்போதைய சட்டசபைத் தொடர் ஆரம்பிக்கும் முன்னர் டக் ஃபோர்ட் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

“ஒன்றாறியோவை பாதுகாப்பதற்கான எங்கள் திட்டத்தைத் தொடர்ந்து நிறை வேற்றவும், எங்கள் மாகாணத்தை மேலும் போட்டித்தன்மைக்கு ஏற்றதாகவும், மீள் எழுந்தன்மை கொண்டதாகவும், மேலும் தன்னம்பிக்கை கொண்டதாகவும் மாற்று வதற்கான பணிகளைத் தொடரவும் எங்கள் அரசாங்கம் தயாராக இருக்கும்” என்று டக் ஃபோர்ட் வணிக நிறுவன உரிமையாளர்களிடம் ஒக்ரோபர் 14ஆம் திகதி உரையாற்றும்போது கூறினார். அப்போது அவர், “இவ்வாறு நாங்கள் செய்வதற்கு நீங்கள் கடினமான தேர்வு களை மேற்கொள்ளவும் கடினமாக உழைக்கவும் தயாராக இருக்க வேண்டும்” என்றார்.

ஒன்றாறியோ முதல்வர் டக் ஃபோர்ட்டின் இந்த உறுதிமொழி ஒன்றாறியோ மாகாணத்தில் வேலையின்மையின் வீதம் பல மாதங்களாக சீராக அதிகரித்துவரும் நேரத்தில் வந்துள்ளது. ஒன்றாறியோ மாகாணத்தின் “நிதி பொறுப்புக் கூறல் அலுவலகம்” (Financial Accountability Office) செப்ரெம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையில், “அமெரிக்க அரசின் சுங்க வரி விதிப்பால் ஒன்றாறியோ மாகாணத்தில் இந்த ஆண்டு வேலையற்றோர் தொகை 7.8%ஆக அதிகரிக்கும். இது அடுத்த ஆண்டு 8.0%ஆக உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது” எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.


Premier Doug Ford and Opposition Leader Marit Stiles

அந்த அறிக்கையில் இவ்வாறு ஏற்படும் வேலை இழப்புகளில் பெரும்பகுதி உற்பத்தித்துறையில் இருந்துவரும் என எதிர்பார்க்கப்படுகிறது எனக் குறிப்பிடப்பட் டிருந்தது. சமீப காலங்களில் ஒன்றாறியோ வின் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களிலிருந்து பணி நீக்கங்கள் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிதி பொறுப்புக் கூறல் அலுவலகம் விடுத்த அறிக்கையில் அமெரிக்க அரசின் சுங்கவரி விதிப்பு ஒன்றாறியோ மாகாணத் தின் பொருளாதார வளர்ச்சியை மெதுவாக்கும் என்றும் அது ஒன்றாறியோ அரசின் நிதிப் பற்றாக்குறையை அதி கரிக்கும் எனவும் தெரிவித்துள்ளது. அதில் ஒன்றாறியோ மாகாண அரசு இந்த ஆண்டு $12 பில்லியன் இழப்பையும் அடுத்த ஆண்டு $9 பில்லியன் இழப்பை யும் சந்திக்கும். 2029-2030ஆம் நிதி யாண்டில் இந்த இழப்பீட்டுத்தொகை $9 பில்லியனை விடக் குறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

டக் ஃபோர்ட்டின் முன்னாள் கொள்கை ஆலோசகராக இருந்த பழமைவாதக் கட்சியின் ஆலோசகரான சாம் டங்கன் (Sam Duncan) CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில், கடந்த சில மாதங்களா கவே பழமைவாதக்கட்சி அரசு டிரம்ப்பினு டைய சுங்கவரி விதிப்பிற்கு எதிராகப் போராடுவதற்கு தம்மைத் தயார்படுத்தி வந்ததாகவும், அவர்கள் பொருளாதார வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்துள்ளதாகவும் கூறினார். ஆனால், இக்குறுகிய கால அமர்வில் இவற்றை நிறைவேற்றுவது அரசாங்கத்துக்கு ஒரு சவாலாக இருக்கலாம் எனவும் தெரிவித்தார். அவர், தான் மிக விரைவில் நிறைய சட்டங்களை பழமைவாதக்கட்சி அரசு நிறைவேற்றும் என எதிர்பார்ப்ப தாகக் கூறினார்.

ஒன்றாறியோ சட்டசபை, ஒக்ரோபர் 20ஆம் திகதி தமது அமர்வை அன்று நடைபெற இருந்த American League Champion ship இறுதியாட்டத்தில் கலந்து கொள்ளும் ரொறொன்ரோ Baseball அணியினரான Blue Jaysஇற்கு எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களும் ஏகோபித்த ஆதரவைத் தெரிவிக்கும் முகமாக "Go Jays Go" என ஆரவாரம் செய்தவாறு ஆரம்பித்தனர்.

அதைத் தொடர்ந்து சட்டசபையில் கேள்வி நேரம் ஆரம்பமாகியது. ஒன்றாறியோ சட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவருமான மாரிட் ஸ்டைல்ஸ் (Marit Stiles) பழமைவாதக்கட்சி அரசு ஒதுக்கிய ‘திறன் மேம்பாட்டு நிதி’ (Skills Development Fund) பராமரிப்பு சரிவர நடைபெற வில்லை என ஒன்றாறியோ மாகாணக் கணக்காளர் நாயகத்தின் (Auditor General) அறிக்கையைச் சுட்டிக்காட்டி பழமைவாதக்கட்சி அரசை கடுமையாக விமர்சித்தார்.

ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் ஒன்றாறியோ மாகாண கணக்காளர் நாயகம் தொழில் அமைச்சர் டேவிட் பிச்சினின் அலுவலகம் (David Piccni) திறன் மேம்பாட்டு நிதிக்கு அரசு ஒதுக்கிய $2.5 பில்லியனை பகிர்ந்து அளிப்பதற்குத் திறன் பயிற்சித் திட்டங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களை தேர்ந்தெடுக்கும் தெரிவு முயற்சியில் தலையிட்டதாக குற்றம் சாட்டியிருந்தார். அரச அதிகாரிகள் நிறுவனங்களை தேர்ந் தெடுக்கும் தெரிவு முறையில் விதிக்கப் பட்ட இலக்குகளுக்குக் குறைந்த மதிப் பெண் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக் கும் அரசு இந்த நிதியை வழங்கியுள்ளது. இவ்வாறு குறைந்த மதிப்பெண் பெற்றவர் களுக்கு ஏன் இந்நிதி வழங்கப்பட்டது என நியாயப்படுத்தும் ஓர் ஆவணப் பதிவு களும் இல்லை. ஆனால், அந்த நிறுவனங்களுக்கு இந்நிதி நன்கொடை யாக வழங்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறு கணக்காளர் நாயகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையே மேற்கோள்காட்டி எதிர்க்கட்சித் தலைவர், “இந்த அரசாங்கம் மக்கள் வரிப்பணத்தை தமது விருப்பத்திற்குத் தம்முடன் தொடர்புள்ள நண்பர்களுக்கு உதவித் தொகையாக வழங்குகிறது.










ஆனால், மக்கள் வேகமாக அதிகரித்து வரும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக் குறையை எதிர்நோக்குகின்றனர். முன்பு ஒருபோதும் எந்த ஓர் அரசாங்கமும் இவ்வாறு அளவுக்கு அதிகமாகச் செலவழித்தது இல்லை” எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தொழில் அமைச்சர் டேவிட் பிச்சினி, இந்நிதி வழங்கிய நிறுவனங்களை ஆதரித்துப் பேசினார். இளைஞர் பயிற்சிப் பணிகளை ஊக்குவிக் கவே இந்நிதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

எதிர்க்கட்சித்தலைவரைத் தொடர்ந்து லிபரல் கட்சியின் சட்டசபை உறுப்பினரான ஜோன் ஃப்ரேசர் (John Fraser) அரசஅவைத் தலைவரான ஸ்ரீவ் கிளார்க் (Steve Clark)இடம் "Conflict of Interest" (நலன் முரண்பாடு)இற்கு வரைவிலக்கணம் கூறுமாறு கேட்டார்.

ஸ்ரீவ் கிளார்க் அரச அவைத்தலைவராக இருக்கமுன்னர் வீட்டுவசதி அமைச்சராக

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# House for Sale / Lease / Condo / BSMT

## Condo for Lease (Brand NewCondo)

* North East view
* 2 Bed Room
* 2 Washroom
* 2 years New Luxury condo
* Huge Balcony
* 1 Parking
* Easy Access to Hwy, TTC, Schools Amenities

(Kennedy / Highway 401)

**Available Nov. 01/2025**

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Sale

- 1 Bed Room + DEN
- 1 Full Washroom
- 1 Parking
- 686 Sq. Ft.

+ 74 Sq. Ft. terrace

Walking Distance to Subway

Don Mills / Eglinch

Vishal **
Call : 416 629 1973

## Detached Home for Sale

3 Bed Room Renovated
(West Rouge Neighbour hood - Toronto)

Walk to Beach....
Go Station
and TTC
Please Call.......

Amal Joseph*
Call : 416 300 8294

## Commercial Space for Lease

417 Sq. Feet

Office Space

GTA Square

2nd Floor

George P *
Call : 416 277 7054

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

* Sales Rep.
** Broker

Tel: 416-321-6969

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

## MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# பரபரப்புகளுக்குள் மறைக்கப்படும் வாக்குறுதிகள்

## – அரவின் –

ஓராண்டை நிறைவு செய்துவிட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தான் தீர்க்காத பிரச்சினைகள், நிறைவேற்றாத வாக்குறுதிகளை, மக்களின் கவனத்தில் இருந்து மறைப்பதற்காக, பரபரப்புகளை உருவாக்கி வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர், இந்த நிலை தீவிரம் அடைந்திருக்கிறது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இந்தியப் பயணத்தின்போது, இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்து கொண்டது.

கிட்டத்தட்ட 11 மாதங்களுக்கு மேலாகியும், அந்த உடன்பாட்டின் உள்ளடக்கம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. சரியான தருணம் வரும்போது, அதனை வெளிப்படுத்துவோம் எனக் கூறிக் கொள்கிறது அரசாங்கம்.

எதிர்க்கட்சிகள் வலியுறுத்தினாலும், இதுவரையில் அந்த உடன்பாடு நாட்டுக்கோ, நாடாளுமன்றத்துக்கோ வெளிப்படுத்தப்படாமல் இரகசியத்தன்மை பேணப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இலங்கை மீது 44 வீத வரிகளை விதித்த பின்னர், அரசாங்கம் அமெரிக்காவுடன் தொடர் பேச்சுக்களை நடத்தியது. அதன்மூலம் வரிகளை 20 வீதமாகக் குறைத்திருக்கிறது.

இதனைவிட குறைப்பதற்கு முயன்றாலும், ட்ரம்ப் அரசாங்கம் அதற்குமேல் குறைக்க முடியாது என கைவிரித்து விட்டது.

இந்த வரிக் குறைப்புக்கு இலங்கை அரசாங்கம் இணங்கிக்கொண்ட விடயங்கள் என்ன என்பது யாருக்கும் தெரியாத நிலை நீடிக்கிறது.

அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை வெளிப்படுத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தபோதும், அரசாங்கம் இறங்கி வருவதாக இல்லை.

அரசாங்கம் திட்டமிட்டு அவற்றை மறைத்து வருகிறது.



பல்வேறு விடயங்களில் இதே நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது.

அண்மையில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரின் முடிவில் இலங்கை தொடர்பான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்ட போது, இலங்கை அரசாங்கம் அதனை நிராகரிப்பதாகக் கூறியது, ஆனால் அதனை வாக்கெடுப்புக்கு விடுமாறு கூறவில்லை.

தோல்வியடைவோம் எனத் தெரிந்து கொண்டே, வாக்கெடுப்பைக் கோருவது பயனற்றது என்றும் அது வீண் நிதி இழப்பை ஏற்படுத்தும் என்றும், அரசாங்கம் நியாயப்படுத்தியது. ஆனால், எதிர்க்கட்சிகள் விடுவதாக இல்லை.

இது குறித்து நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தின. இதையடுத்து. நவம்பர் 4ஆம் திகதி இந்த விவாதம் நடத்தப்படும் என அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால் இப்பொழுது அந்த விவாதம் நடக்காது என உறுதியாகியிருக்கிறது.

வத்திக்கான் வெளிவிவகார அமைச்சர் அன்றையதினம் கொழும்பு வரவுள்ளதால், அந்த விவாதம் நடக்காது என்றும் பின்னர் அது நடத்தப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியிருக்கிறார்.

அரசாங்கம் இந்த விவாதத்தை நடத்துவதற்கு விரும்பவில்லை என்பது தான் உண்மை. வெளிப்படைத் தன்மை யுடன் செயற்பட அது தயாராக இல்லை. அதேபோல வத்திக்கான் வெளியுறவு அமைச்சரின் வருகையும்கூட, இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியான ஒரு விடயம். ஏனென்றால் அனுரகுமார திசாநாயக்க வின் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது, தாங்கள் மிகக் குறுகிய காலத்தில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் யார் என்று கண்டறிந்து சட்டத்தின்முன் நிறுத்து வதாக வாக்குறுதி கொடுத்திருந்தது. ஆனால் ஓராண்டு கடந்தும்கூட, அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

விசாரணை நடப்பதாக கூறப்படுகிறதே தவிர சூத்திரதாரிகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அமெரிக்கா வுக்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் ஒரிரண்டு பேர் கைது செய்யப்படும் வாய்ப்பு இருப்பதாகக் கூறியிருந்தார்.

இன்னமும் அவ்வாறான கைதுகள் எதுவும் நடக்கவில்லை. இந்த அரசாங்கத்தின் எல்லா வாக்குறுதிகளின் நிலையும் இவ்வாறுதான் இருக்கிறது.

பரபரப்புக்காக சில விடயங்கள் செய்யப்படுகின்றனவே தவிர, வாக்குறுதி களை உண்மையாக நிறைவேற்றுகின்ற வகையில் செயற்படவில்லை.

இந்த வாக்குறுதிகளின் மீதான மக்களின் கவனத்தைச் சிதறடிக்கும் வகையில் அரசாங்கம் அவ்வப்போது பரபரப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார். இதன்மூலம் ஊடகங்களினதும், மக்களின தும் கவனம் அதன்மீது திருப்பப்பட்டது. அப்பொழுது ரணில் கைது செய்யப்பட்டது சரியா-தவறா என்ற விவாதம் எழுந்தது. அவர் தவறு செய்தாரா-இல்லையா என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

அவர் அரச பணத்தை மோசடி செய்தாரா இல்லையா என்று ஆளாளுக்கு கவனம்செலுத்திக் கொண்டு இருந்தார் களே தவிர, அரசாங்கத்தின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்மீது யாரும் கேள்வி எழுப்பவில்லை.

அதற்குப்பின்னர், இந்தோனேசியாவில் தங்கியிருந்த பாதாள உலகக் குழுவினர் சிலரை சிஐடியினர் பிடித்துக்கொண்டு வந்தனர்.

அந்தப் பரபரப்பு ஓய்வதற்கிடையில், நேபாளத்தில் பதுங்கி இருந்த இஷாரா செவ்வந்தி உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டுகொண்டு வரப்பட்டனர்.

புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சாட்சிக் கூட்டுக்குள் நின்று கொண்டிருந்த கணேமுல்ல சஞ்ஜீவ என்ற பாதாள உலக குழுத் தலைவரைச் சுட்டுக்கொன்ற சம்பவத்திற்கு முக்கியமான சூத்திரதாரி இஷாரா செவ்வந்தி. அந்தச் சம்பவத்தை அடுத்து தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த அவர், கடைசியாக இந்தியா வழியாக நேபாளம் சென்று பதுங்கி இருந்தார்.

இதனை மோப்பம் பிடித்த புலனாய்வுப் பிரிவினர் அவரைப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தனர்.

இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டு கொண்டுவரப்பட்ட படங்களும் காணொளி களும் ஊடகங்களை நிறைத்தன. மக்களின் கவனம் முழுமையாக அதன் மீது திரும்பியது.

செவ்வந்தியின் அழகு பற்றிய விவாதங்களும் நடந்தன. அவர் ஒரு குற்றவாளி என்பதை மறந்து, அவரது அழகை வர்ணித்து, ஆராய்ந்தனர்.

அதன்பின்னர் அவர் வெளியிட்ட தகவல்கள், அவர் எப்படித் தப்பினார், யார் யார் உதவினர், எங்கிருந்து படகில் பயணித்தார், பதுங்கி இருக்க யார் உதவினர், இந்தியாவில் எப்படித் தங்கி இருந்தார், நேபாளத்தில் எவ்வாறு மறைந்திருந்தார், என்று விலாவாரியாக செய்திகள் வெளியிடப்படுகின்றன.

அதையடுத்து அவருக்கு உதவிய ஆனந்தன் உள்ளிட்ட தமிழர் வடக்கில் வரிசையாகக் கைது செய்யப்பட்டது, படகு, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது வரை பரபரப்புகளுக்குப் பஞ்சமேயில்லை.

அதற்குள் அனைவரும் மூழ்கிப் போகின்றனர் என்பதைவிட மூழ்கடிக்கப்படு கின்றனர் என்பதே சரி. விசாரணைத் தகவல்களை வெளியிடுவதும் அரசாங்கம்தான்.

பொலிசார் மூலமே, விசாரணைத் தகவல்கள் அதிகாரபூர்வமற்ற வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த விடயங்களின்மீது மக்களின் கவனம் திரும்ப வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இது மக்களின் கவனத்தைச் சிதைக்கும் சிதறடிக்கும் செயல்.

ஏதேனும், ஒரு விசாரணை தொடர்பாக யாரேனும் தகவலை வெளிப்படுத்தி விட்டால், அவர்மீது பாய்ந்துகொண்டு கைது செய்யும், விசாரணை நடத்தும், பொலிசாரே இந்த விடயத்தில், அடுக்கடுக்காகக் கதைகளை அவிழ்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இவை எல்லாம் உண்மையா பொய்யா என்று தெரியாது, ஆனால் அவற்றின்மீது மக்களின் கவனம் திருப்பப்பட்டு விவாதம் நடத்தப்படுகிறது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram -November 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-03 5:59 PM Page 5



# ஒன்ராறியோவில் ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இருந்தபோது Greenbelt தொடர்பான ஆவணங்கள் கையாள்வதில் "Conflict of Interest" தொடர்பான விதிகளை மீறியிருந்தார் என ஒன்ராறியோ நேர்மை ஆணையாளர் (Ontario Intergrity Commissioner) தெரிவித்திருந்தார்.

இதனைக் கருத்தில் கொண்டே ஸ்ரீவ் கிளார்க் இந்தக் கேள்வியை அரச அவைத் தலைவரிடம் கேட்டிருந்தார். இக் கேள்வியால் சட்டசபையில் ஏற்பட்ட அமளி அடங்கிய பின்னர் பதிலளித்த அரச அவைத் தலைவர், "ஒன்ராறியோ மாகாண தொழிலாளர்களின் பிரச்சினைக்காகப் போராடுவதற்கு அரசாங்கம் எதிர்க் கட்சியினரின் விநாடி வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று மறுத்துப் பதிலளித்தார்.



Premier Doug Ford. Thanks: Alex Lupul/CBC

வின்சர் (Windsor) நகரத்தில் ஏற்பட்டுள்ள வேலை இழப்புகள் பற்றி கேள்வி எழுப்பிய புதிய ஜனநாயகக்கட்சி சட்டசபை உறுப்பினர் லிசா கிரெட்ஸிக்கு (Lisa Gretzky) முதல்வர் டக் ஃபோர்ட் பதிலளித்தார். அவர், "நிறுவனங்கள் ஒன்ராறியோவில் முதலீடு செய்வதற்கான சூழலையும், நிலைமைகளையும் மாகாண அரசு உருவாக்கியுள்ளது" என்றார். அத்துடன் அவர், "நெருப்பு வளையத்தில் (Ring of Fire) சுரங்க வேலைகளைத் தொடரவும், மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்க அணுசக்தியை அதிகரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது" என்றார்.

சட்டசபையின் இடைவேளையின்போது திறன் மேம்பாட்டு நிதி எவ்வாறு பகிர்ந்து வழங்கப்பட்டது என ஊடகவியலாளர்



Ontario Minister of Labour, Immigration, Training and Skills Development David Piccini. Thanks: The Canadian Press/Laura Proctor

களின் சரமாரியான கேள்விகளுக்கு தொழில் அமைச்சர் டேவிட் பிச்சினி பதிலளிக்க வேண்டியிருந்தது. குறைந்த மதிப்பெண் பெற்ற சில விண்ணப்பதாரர்களுக்கு இந்த நன்கொடைப் பணத்தை வழங்குமாறு அவர் ஏன் தலையிட்டுக் கூறினார் எனவும் ஊடகவியலாளர் கேட்டனர். பழமைவாதக்கட்சிக்கு நன்கொடை செய்வோருக்கு திறன் மேம்பாட்டு நிதியில் இருந்து பணம் வழங்கப்பட்டதா எனவும் கேள்வி கேட்கப்பட்டது. இக் கேள்விகளுக்குப் பதிலளித்த தொழில்



Labour Minister David Piccini speaks during Question Period at Queen's Park. Thanks: CTV News

அமைச்சர், "தொழிலாளர்களின் ஆதரவு அரசுக்கு உள்ளது. மக்களுக்கு எக் கட்சிக்கும் நன்கொடை அளிக்க சுதந்திரம் உள்ளது. திறன் மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டில் தனது அலுவலகம் அரச அதிகாரிகளுடன் இணைந்தே பணியாற்றியது. தனது அலுவலகம் 'அரசாங்க முன்னுரிமைகள்' ஆதரிக்கப்படுவதை உறுதி செய்தது. இவ்விடயத்தில் ஒன்ராறியோ நேர்மை ஆணையாளர் விசாரணை செய்ய விரும்பினால் நான் அதை வரவேற்கிறேன். எமது திட்டம் மக்களின் வாழ்க்கையை மாற்றும் முக்கியமான திட்டங்களுக்கு நிதியளிப்பது. முதலுதவிப் பணியாட்களை ஆதரிப்பது, மற்றும் கட்டுமாணத்துறைப் பணியாட்களை ஆதரிப்பது" என்றார்.

ஓவியம் ஒன்று வாங்குவதற்கு இத்தாலிக்கு அரச பணத்தில் பயணம் செய்த கத்தோலிக்க மாவட்டப் பாடசாலை சபை அறங்காவலர் அப்பணத்தை அரசிற்குத் திருப்பி செலுத்தாவிட்டால் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கான மசோதாவை கல்வி அமைச்சர் போல் கலண்டரா (Paul Calandra) சட்டசபையில் சமர்ப்பித்தார்.

Brant Haldimand Norfolk கத்தோலிக்க மாவட்ட பாடசாலை சபை உறுப்பினரான அறங்காவலர் Mark Watson ஓவியம் வாங்குவதற்கு இத்தாலிக்கு சென்ற அரச பணத்தில் இன்னமும் $10,000 திருப்பிக் கட்ட வேண்டியுள்ளது. அவர் அதை மீளச் செலுத்தாவிட்டால் அவரைப் பதவி நீக்கம் செய்யவுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார்.




Education Minister Paul Calandra speaks in the legislature at Queen's Park. Thanks: CTV News

அமைச்சர் சட்டசபையில் இந்த மசோதாவைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில், "இந்த அறங்காவலர் சென்ற பயணம் அவரது விடுமுறைப் பயணம். அதற்கு அவர் செலவழித்த அரச பணத்தை திருப்பிச் செலுத்த அவர் மறுக்கிறார். நான் சமர்ப்பிக்கும் இந்த மசோதா மிகவும் எளிமையானது. பெற்றோர், மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு அவர் செலுத்த வேண்டிய பணத்தைத் திருப்பிச் செலுத்த மறுத்ததற்காக அந்த அறங்காவலரை பணிநீக்கம் செய்யும்" என்று கூறினார்.



Premier Doug Ford speaks during Question Period at Queen's Park. Thanks: CTV News

கல்வி அமைச்சர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், "ஒவ்வொரு பாடசாலை கல்விச்சபையும் ஆடம்பரப் பயணம் மற்றும் வீண்செலவுகளுக்கு அல்லாமல், வகுப்பறைக்கு வளங்களை ஒதுக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். பாடசாலை கல்விச்சபை அமைப்பை மாற்றியமைக்க அரசாங்கம் ஏன் தனது கவனத்தைச் செலுத்துகிறது என்பதற்கு இச்சம்பவம் ஓர் எடுத்துக் காட்டு. இந்த அறங்காவலர் தான் செலுத்த வேண்டியதை திருப்பிச் செலுத்த மறுக்க அனுமதி அளிக்கக்கூடிய ஒன்ராறியோ பாடசாலை கல்விச்சபை நிர்வாக



NDP Leader Marit Stiles. Thanks: Alex Lupul/CBC

அமைப்பை நாங்கள் மறுபரிசீலனை செய்கிறோம். பெரும்பாலும் அறங்காவலர் மாணவர்களுக்கான தமது பொறுப்பை மறந்து செயல்படுகின்றனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



A speed camera in Toronto, Ontario. Thanks: The Canadian Press/Sammy Kogan

மாகாண அரசு சிவப்பு நாடா நடைமுறைகளைக் குறைத்து ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மேலும் போட்டித் தன்மை வாய்ந்ததாக மாற்றும் நோக்கமாகக்கொண்ட ஒரு பெரிய மசோதாவின் ஒரு பகுதியாக ஒன்ராறியோ மாகாணத்தில் வேகத்தைப் பதிவு செய்யும் கமராக்களை நடைமுறைப்படுத்துவதை தடை செய்வதையும் சேர்த்தது. இதில் நகரசபைகள் வேகத்தைக் கட்டுப்படுத்த வேகத்தைப் பதிவு செய்யும் கமராக்களை வீதி




The Ontario legislature at Queen's Park. Thanks: Joshua Freeman /CP24

ஓரங்களில் அமைப்பது தடை செய்யப் படும். அதற்குப் பதிலாக வேகத் தடைகள் (Speed bumps), அறிவிப்பு பலகைகள் மற்றும் கல்விப்பிரசாரங்கள் பாவிப்பதற்கு ஊக்குவிக்கப்படும்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பிரப்மீத் சர்காரியா (Prabmeet Sarkaria), "மாகாண அரசு தெருக்களில் வாகனங்களின் வேகத்தைக் குறைக்க வேண்டியதைக் குறித்த கவலையை நகரசபைகளுடன் சேர்ந்து பகிர்ந்துக் கொள்கிறது. ஆனால், அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதில் மட்டுமே நகரசபைகளுடன் வேறுபடுகின்றது" என்றார்.

Get in touch for your perfect home!

PUSHPA
KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier
(Teacher)

Vlambaram -November 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-03 5:59 PM Page 6



# 13ஆவது திருத்தச் சட்டத்தை வைத்து தமிழரைப் பிளவுபடுத்த முயற்சி!

## – முகிலன் –

மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்துவது மற்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக வலியுறுத்தவில்லை என அண்மையில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஒரு குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

அவ்வாறு ஒற்றுமையாக வந்து வலியுறுத்தினால் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்தக் கருத்து தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவிகே சிவஞானத்திற்கு, எரிச்சலை ஏற்படுத்தி இருந்தது.

ஓர் ஊடகச் சந்திப்பை நடத்திய அவர், சைக்கிள் கட்சியைத் தவிர நாங்கள் எல்லோரும் மாகாண சபைக்கு தேர்தல் நடத்துமாறும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துமாறுதானே கூறுகிறோம்.

நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டிருக்கின்ற போது, இந்தியா ஏன் ஒற்றுமையாக வாருங்கள், ஒற்றுமையாக வாருங்கள் என்று கேட்கிறது என, ஊடகவியலாளர்களிடம் விசனத்துடன் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரது சந்தேகம் சரியானது. ஆனால் அதனை அவர் கேட்டிருக்க வேண்டிய இடம் அதுவல்ல. அதனை அவர் இந்தியத் தூதரகத்திடம்தான் கேட்டிருக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் பரபரப்புகள் அடங்கிய பின்னர் இந்தியாவில் இருந்த, வட-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவர் ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனைச் சந்தித்து, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவது மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு வலியுறுத்துவது போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தார். அவர் ஏனைய சில கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்திருந்தார்.

இதற்குப் பின்னர், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியாகவோ அல்லது அதன் பங்காளிக் கட்சிகள் தனியாகவோ இந்த விடயம் தொடர்பாக பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள், கூட்டங்களை நடத்தத் தொடங்கின. இதற்குப் பிள்ளையார் சுழி போட்டுக் கொடுத்தவர் வரதராஜப்பெருமாள்.

அவர் இந்திய-இலங்கை உடன்பாட்டுக்குப் பின்னர், 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டபோது, வட-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டார். 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை அவர் அந்தப் பதவியில் இருந்தார்.



அதற்குப் பிறகு இந்திய இராணுவத்தினர் திருகோணமலையிலிருந்து வெளியேறிய போது அவரும் கூடவே வெளியேறி, ஒடிசாவிலும் பின்னர் மத்தியப் பிரதேசத்திலும் அடைக்கலம் தேடிக் கொண்டார்.

இந்தியாவின் பாதுகாப்பில், இந்தியப் புலனாய்வுத்துறை அளித்த வசதிகளுடன் அவர் அங்கேயே தங்கியிருந்தார்.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டை சந்திரிகா அரசாங்கம் கைப்பற்றிய பின்னர், விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்ட அல்லது விடுதலைப் புலிகளுடன் முரண்பாட்டைக் கொண்டிருந்த அமைப்புகளை, சந்திரிகா மீண்டும் அரசியலுக்கு அழைத்து வந்தார். யாழ்ப்பாணத்தில் தேர்தல்களை நடத்தி அவர்களைப் போட்டியில் நிறுத்தி சிவில் நிர்வாகத்தை உருவாக்க முயன்றார்.

சிவில் நிர்வாகம் நடத்த அழைத்து வரப்பட்ட அந்த அமைப்புகளுக்கு ஆயுதங்களையும் வழங்கினார்.

ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட், ஈபிடிபி உள்ளிட்ட அமைப்புகள் அரசாங்கத்துடன் சேர்ந்து, அரச படைகளுடன் சேர்ந்து வெளிப்படையாக இயங்கியிருந்தன. இந்த அமைப்புகள், தேர்தல்களில் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியதுடன். நாடாளுமன்றத்திலும் அங்கம் வகித்தன.

அந்தக் காலகட்டத்தில் வரதராஜப் பெருமாளும் யாழ்ப்பாணம் வந்து அரசியல் செய்ய முயன்றார். ஆனால் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. அவரை ஓர் அரசியல் தலைவராகக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை.

பின்னர் மீண்டும் இந்தியாவுக்கே சென்று தங்கியிருந்த வரதராஜபெருமாள் இப்பொழுது மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார். அவரது வருகையுடன் தான், தமிழ் கட்சிகளுக்கு இடையில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது.

அவர் வந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, மாகாண சபையை மீள இயங்குமாறு வலியுறுத்தும் நோக்கத்துடன் செயற்படத் தொடங்கினார்.

இதற்குப்பின்னால் இந்தியா அல்லது இந்திய புலனாய்வு அமைப்பு இருந்திருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாக சந்தேகங்கள் உள்ளன. ஏனென்றால், அவர் அண்மையில் அளித்துள்ள ஒரு செவ்வியில், தமிழரின் பிரச்சினைக்கு மாகாண சபைதான் தீர்வு எனக் கூறியிருக்கிறார். ஆனால் தமிழர் எதிர்பார்ப்பது ஒரு சமஸ்டித் தீர்வை என்பது வெளிப்படை யான உண்மை.

தேர்தல்களின்போது, அதற்கு ஆதரவாகவே மக்கள் தீர்ப்பளித்து வந்துள்ளனர். ஆனால் வரதராஜ பெருமாளோ அதற்கு மாறாக தமிழர் பிரச்சினைக்கு மாகாண சபைகள்தான் தீர்வு என வலியுறுத்துகிறார். அவருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறைந்து விட்டன.

இந்தியா கூறுவதைக் கேட்டுவந்து இங்கு ஒப்புவிக்கின்ற ஒருவராகவே அவர் இன்றைக்கும் இருக்கின்றார்.

1988-90 காலப்பகுதியில் அவர் எப்படி செயற்பட்டாரோ இப்போதும் அப்படியே செயற்படுகிறார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கட்சிகள் தனித்தனியாகப் போய்விட்டதன் விளைவாக தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கில் ஆசனங்களை எடுத்துக் கொண்டது.

அதுமட்டுமல்ல அர்ச்சுனா இராமநாதனும், ஓர் ஆசனத்தைக் கைப்பற்றி இருந்தார்.

இது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு சவாலாக மாறியது, அதனால் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள் எப்படியாவது வலுவான கூட்டை அமைக்க முயன்றனர். ஆனால், தமிழரசுக் கட்சிக் கூட்டணிக்கு வரத் தயங்கியது. அதனால் அந்தக் கட்சி தவிர ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்தன.

குறிப்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில், தமிழ்த் தேசியப் பேரவை என்ற பெயரில் போட்டியிட்டிருந்தன.

அதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆசனங்கள் கிடைத்திருக்காவிட்டாலும், மக்கள் மத்தியில் கணிசமான வரவேற்புக் கிடைத்தது.

இப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிக்கின்ற, அதனை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கொள்கை நிலைப்பாட்டைக் கொண்ட, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமது தேர்தல் கூட்டாளியான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்துவதை கடுமையாக எதிர்க்கிறது. இந்த விவகாரம் பகிரங்கமாக விமர்சிக்கப்படுகின்ற ஒன்றாக மாறியிருக்கிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்ட சில கருத்துகளை முன்னிறுத்தி சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளிப்படுத்தி இருக்கின்ற கருத்துகள் சில ஏற்றுக்கொள்ள முடியாதவை.

தங்களை நியாயப்படுத்துவதற்காக, தங்களது முடிவையும் தீர்மானத்தையும் சரியென நிரூபிப்பதற்காக, அவர்கள் முற்படுகின்றனர். இந்த விவகாரத்தினால் இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி இப்பொழுது திரிசங்கு நிலையில் உள்ளன. இதற்கு அடிப்படைக் காரணம் 13ஆவது திருத்தச் சட்டம்தான்.

13ஆவது திருத்தச் சட்டத்தைத் தீர்வாக ஏற்றுக்கொள்ளாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாகாண சபைகளுக்குத் தேர்தலை எதிர்கொள்ளத் தயார் எனக் கூறியிருந்தது. இந்த நிலைப்பாடானது, பரவலான விமர்சனங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டம் கூட்டணிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி வருகிறது. இந்தப் பிளவு ஆரோக்கியமான ஒன்று அல்ல.

தமிழ்த் தேசியக் கட்சிகளை பலவீனப் படுத்துவதற்கு, பிளவுபடுத்துவதற்கு இந்தியத் தரப்போ அல்லது அரச தரப்போ தீவிரமாக முயற்சிக்கிறது என்று தெரிகிறது.

இது ஒற்றுமையாக இருந்த தமிழ்த் தரப்புகளை பிளவுபடுத்துவதற்கே வழி கோலியிருக்கிறது.

தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாடு ஒன்றுக்குள் வராது போனால் இவ்வாறான பிளவுபடுத்தும் சதிகளுக்கு சிக்கிப் போகும் நிலை தொடர்ந்து கொண்டிருக்கும்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram -November 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-11-03 5:59 PM Page 7



# தமிழ்நாட்டில், வடமாநில தொழிலாளர்கள் இனி முதலாளி ஆவார்கள்!

## நேர்காணல்: கோவை தொழிலதிபர் ஏ.வி. வரதராஜன்

## நேர்கண்டவர்:கண்ணன்

ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில், சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, தன் கடின உழைப்பு, விடா முயற்சியால் தொழில் துறையில் உச்சத்தை அடைந்தவர், ஏ.வி. வரதராஜன். தமிழ்நாட்டில் கொங்கு மண்டலத்தின் தொழில்துறை சாதனையாளர்களில் முக்கியமானவராக இன்று அறியப்படுபவர். சுமார் 3,000 பணியாளர்களைக் கொண்டுள்ள ஏ.வி.வி. குரூப் தொழில் நிறுவனமும் கோவை கொடிசியாவும் இவரது சாதனைகளுக்கு சாட்சிகள். ஏ.வி. வரதராஜன், ஓர் எழுத்தாளரும்கூட. அவரைச் சந்தித்தோம்.

**கேள்வி:** இந்தியாவில் வேலை வாய்ப்பின்மை அதிகரித்து வருவதாக சமீப புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இன்னொரு பக்கம் மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. விரைவில் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, கோடிக்கணக்கான வேலை வாய்ப்புகள் உள்நாட்டில் தேவை. உங்கள் புத்தகம் தலைப்பையே கேள்வியாகக் கேட்கிறோம், இந்தியாவில் கோடிக்கணக்கான வேலைகள் சாத்தியமா?

**பதில்:** இந்தியாவில் இப்போது மட்டுமல்ல சுதந்திரம் வாங்கியதில் இருந்தே வேலை வாய்ப்பின்மை ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டே இருக்கிறது. ஆனாலும், கோடிக்கணக்கான வேலைகள் சாத்தியம்தான். அதேநேரம், அது ஒரு நாளில் நடந்துவிடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். மக்களிடையே வாங்கும் சக்தி அதிகமாக வேண்டும். அப்போதுதான் பொருள்களுக்கு தேவை உருவாகும். தயாரிப்புகள் அதிகரித்தால்தான் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். எனவே, இதற்கான அடிப்படையான சூழலை உருவாக்க வேண்டும். அரசும் அரசு சார்ந்த நிறுவனங்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் உதவ வேண்டும். புதிதாக தொழில் தொடங்கவும் தொழில் விரிவாக்கத்துக்கும் உதவ முன்வர வேண்டும். உள்நாட்டுத் தொழில் நுட்பத்தை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு இயந்திரங்கள், உபகரணங்களை இறக்குமதி செய்வதைக் குறைத்து, உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பயன்பாட்டை ஆதரிக்க வேண்டும். வேலை வாய்ப்புகளை நாம்தான் உருவாக்க வேண்டும்.

**கேள்வி:** நீங்கள் உங்கள் நூலில் வெளிநாட்டு முதலீடுகள் வேண்டாம் என்று சொல்கிறீர்கள், ஏன்?

**பதில்:** வேலை வாய்ப்பை உருவாக்கவும், தொழில்துறை வளர்ச்சிக்கும் வெளிநாட்டு முதலீடு அவசியம் என்பது தவறான பார்வை. தமிழ்நாட்டில் கொங்கு மண்டலத்தின் தொழில் வளர்ச்சி கோடிக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. 5-10 பேர் வேலை செய்யும் சிறுதொழில் நிறுவனங்கள் தொடங்கி 1000-2000 பேர் வேலை செய்யும் பெரிய நிறுவனங்கள் என பல நிறுவனங்களால் நிறைந்துள்ளது கொங்கு மண்டலம். வேலைக்கு இங்குள்ள ஆட்கள் போதாமல் வடமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்கிறோம். அந்தளவு வளர்ச்சி வெளிநாட்டு முதலீடு இல்லாமல் நிகழ்ந்ததுதானே.

சரி, வெளிநாட்டு முதலீடுகளை ஏன் தவிர்க்கவேண்டும் என்று சொல்கிறேன். இந்தியாவில் பணம் இல்லை என்பது தவறு. நிறைய பணம் உள்ளது. ஆனால், அப்பணத்தைத் தொழில் வளர்ச்சிக்கு ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அந்த வாய்ப்புகள் அந்நிய முதலீட்டுக்கே வழங்கப்படுகிறது. அவர்கள் கொண்டுவரும் முதலீட்டைவிட திருப்பி எடுத்துக்கொண்டு செல்லும் வளங்கள் மிக அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு அரசு ஏராளமான சலுகைகள் வழங்குகிறது. அந்தச் சலுகைகளை இந்திய முதலாளிகளுக்கு வழங்குவதில்லை. இந்திய முதலாளிகளுக்கு வழங்கினால் வளங்கள் வெளியேறாமல் இங்கேயே தங்கும். இந்தியர்களுக்கு தொழில்களில் அதிக நாட்டமும் மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் தொழிலில் வளர்ச்சி பெறக்கூடிய நல்ல மூளையும் உள்ளது. இந்தியாவிலேயே நல்ல தொழில்முனைவோரும் இருக்கின்றனர். இந்தியாவில் தொழில்நுட்பத்தில் தலைசிறந்த நகரம் கோவை. கோவையின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இங்குள்ள தொழில்முனைவோர்தானே.

**கேள்வி:** தமிழ்நாட்டில் இப்போது வடதொழிலாளர்கள் வரவு ஒரு பெரிய பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது. உங்கள் கருத்து என்ன?

**பதில்:** தொழில்துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டில் படித்தவர்கள் மட்டுமல்லாது படிக்காதவர்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைத்து வருகின்றன. குறிப்பாக, சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் ஜவுளி, ஆட்டோமொபைல், தகவல் தொழில் நுட்பம், கட்டுமானம் மற்றும் உற்பத்தித் தொழில்கள் என பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் இங்கே நிறைய இருக்கிறது. ஆனால், நம் இளைஞர்கள் அந்த வேலைகளைச் செய்ய முன்வருவதில்லை. தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், பலர் மேற்படிப்புப் படித்தவுடன் அதற்கேற்ற வேலைக்கு சென்றுவிடுகின்றனர். இதனால் குறைந்த ஊதியம், கைத்தொழில், உடல் உழைப்புத் தொழில்கள் செய்ய ஆள் கிடைப்பதில்லை. இந்நிலையில், அந்த இடத்தை நிரப்பும் வகையில், அவ்வாறான வேலைவாய்ப்புகளைக் குறிவைத்து, தற்போது தமிழ்நாட்டைச் சேர்ந்தோரைக் காட்டிலும் வெளிமாநிலத்தைச் சார்ந்தோர், அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், வடமாநிலத்தைச் சேர்ந்தோர் இங்கு வருகின்றனர். அவர்கள் வரவில்லை என்றால் கோயம்புத்தூரிலும் திருப்பூரிலும் தொழில்கள் முடங்கிவிடும் என்பதுதான் நிகழ்கால உண்மை.



குறைந்த ஊதியம், கூடுதல் நேர வேலைக்கு அவர்கள் சம்மதிப்பதால் பெரும்பாலான இடங்களில் அவர்களுக்கே முன்னுரிமையும் கொடுக்கப்படுகிறது. இதே வேலையை சொந்த மாநிலத்தில் அவர்கள் செய்தால் குறைந்த ஊதியமே கிடைக்கும் என்பதால், அதை முகம் மலர்ந்து ஏற்றுக்கொள்கின்றனர். இங்கு பாதுகாப்பான சூழலும் நிலவுவதால், ஒருமுறை சொந்த ஊர் சென்று திரும்பும்போது, தங்களுடைய உறவினர்கள், நண்பர்களையும் இங்கே வேலைக்காக அழைத்து வந்து விடுகின்றனர். முன்பெல்லாம், வெளிமாநில ரயில்கள் வரும் சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தில்தான் வடமாநிலத்தவர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். இப்போது, மாநிலத்துக்குள் ஓடும் ரயில்கள் இயங்கும் எழும்பூர் ரயில் நிலையத்திலும் அவர்களை அதிகம் காண முடியும். காரணம், சென்னை முதல் கன்னியாகுமரிவரை குக்கிராமங்களில்கூட வடமாநில தொழிலாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

இவர்களும் இந்தியர்கள் என்ற வகையில், வேலை செய்ய இவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றாலும், சில நேரங்களில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு விடுவதையும் புறம்தள்ள முடியாது. எடுத்துக்காட்டாக, சமீபத்தில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் ஒக்ரோபர் 12, 2025 அன்று சிறுமி ஒருவரை வடமாநில இளைஞர் இழுத்துச்சென்று பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டை நோக்கி வேலை தேடி வரக்கூடிய இத்தகைய தொழிலாளர்களின் விபரங்களை வேலை கொடுக்கும் நிறுவனங்கள் முறையாகப் பெற்று பதிவு செய்ய வேண்டும் என்று ஏற்கனவே தொழிலாளர் நலத்துறை அறிவுறுத்தியுள்ளது. அதன் அடிப்படையில், தற்போது தமிழ்நாட்டில் எவ்வளவு வடமாநில தொழிலாளர்கள் தங்கியிருந்து பணிபுரிகின்றனர் என்ற விபரத்தையும் தொழிலாளர் நலத்துறை வெளியிட்டுள்ளது. அதன் எண்ணிக்கையைப் பார்க்கும்போதுதான் அதிர்ச்சியாக உள்ளது.

தொழிலாளர் நலத்துறையின் கணக்குப்படி, மொத்தம் 11 லட்சத்து 93 ஆயிரத்து 297 பேர் தமிழ்நாட்டில் பல இடங்களில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. இதில் ஒடிசா, பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தோர் அதிகம் பேர் ஆவர். மாநிலம் வாரியாகப் பார்த்தால், ஒடிசா 286,500, பீகார் 247,016, ஜார்கண்ட் 190,518, மேற்கு வங்காளம் 184,960, அசாம் 92,105, உத்தரபிரதேசம் 89,462, சத்தீஷ்கார் 24,882, மத்தியப் பிரதேசம் 14,440, ஆந்திரா 13,036, கேரளா 11,043, ராஜஸ்தான் 6,414, கர்நாடகா 6,010, மராட்டியம் 4,935, திரிபுரா 3,806, அருணாசலப் பிரதேசம் 2,073, பஞ்சாப் 1,946, டெல்லி 1,896, உத்தரகாண்ட் 1,803, மேகாலயா 1,636, குஜராத் 1,290, மணிப்பூர் 1,128, நாகாலாந்து 1,016, இதேபோல், சண்டிகர், தெலுங்கானா, அரியானா, இமாசலப் பிரதேசம், மிசோரம் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா 500 முதல் 1,000இற்கு உட்பட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களும், ஜம்மு காஷ்மீர், சிக்கிம், அந்தமான் நிகோபர் தீவு, கோவா, டாமன் டையூ, லடாக், லட்சத்தீவு ஆகிய மாநிலங்களில் இருந்து தலா 20 முதல் 500இற்கு உட்பட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களும் தமிழ்நாட்டில் தங்கி பணிபுரிகின்றனர். இந்த விபரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், பதிவு செய்யாமல் எவ்வளவு பேர் இருக்கின்றனர் என்ற விபரம் தெரியாததால், இந்த விடயத்தில் தமிழ்நாடு அரசு சற்றுக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமான ஒன்று.

தமிழ்நாட்டில் திருப்பூர் தொழில் வளர்ச்சி பிரமிக்கத்தக்க வளர்ச்சி. இந்த வளர்ச்சிக்குப் பின்னால் நம் ஊர் தொழிலாளிகளின் உழைப்புதான் உள்ளது. ஆரம்பத்தில் திருப்பூருக்கு வேலைக்கு வந்தோர் பெரியதாகப் படிப்பு இல்லாதவர்கள்தான். திருப்பூருக்கு தொழிலாளியாக வந்து, மேஸ்திரியாகி, சூப்பர்வைசராக உயர்ந்து, பின்னர் ஒரு தொழில் தொடங்கி முதலாளியானவர்கள் நிறையப் பேர். இப்படி சிறு அளவில் தொடங்கி பெரியளவு உயர்ந்த ஏராளமான நிறுவனங்களை திருப்பூரிலும் கோயம்புத்தூரிலும் அதிகம் பார்க்கலாம். இனி இது வடமாநில தொழிலாளர்களுக்கு நடக்கும். வடமாநிலத்தில் இருந்து தொழிலாளியாக வருவோர் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி எல்லாப் பிரிவுகளிலும் காலூன்றிக்கொண்டு இருக்கின்றனர். கொஞ்ச நாட்கள் சென்றால் அவர்களும் நிறுவனங்களைத் தொடங்கி முதலாளி ஆகிவிடுவர். அதில் சந்தேகம் வேண்டாம்.

## நாமும் நமது இல்லமும் 688

# ரொறொன்ரோ பெரும்பாகத்தின் ஆதன சந்தை



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

எனது எண்ணத்தில் GTAஇல் ஆதனம் வாங்குவதற்காக இருப்போர், இன்றைய நிலைமையை சாதகமாகப் பாவிப்பது சிறப்பாகலாம்.

ஆதன விலை குறையும்போது மற்றும் குறைந்த விலையை அல்லது விலை அதிகரிக்கும்போது அதிகூடிய விலையை நிர்மாணிப்பது என்பது இலகுவல்ல. மிகக்குறைந்த விலைக்கு அண்மையில் பெற்றாலே போதுமானதாகக் கொள்ளலாம்.

அண்மைக்காலங்களில் ஆதன வியாபாரம் எந்தத் திசையில் செல்லலாம் என்பதனை நிர்மாணிக்க முடியாமல் உள்ளது.

ஆதன வியாபாரத்தின் திசையைத் தீர்மானிப்பதற்கு சராசரி விலையைவிட நடுத்தர விலை (Median Price) சிறந்தது என்பது எனது கருத்து.

நடுத்தர விலை என்பது, விற்ற ஆதனங்களின் விலையை ஒழுங்குபடுத்தும்போது கீழிருந்து மேலே அல்லது மேலிருந்து கீழே வரும்போது நடுவில் வருவதே நடுத்தரவிலை (Median Price) ஆகும்.

அதாவது, மேலும் கீழும் சமமான ஆதன விலைகள் காணப்படும். ஆனால், சராசரி விலை என்பது மொத்த விலையை, மொத்தமாக விற்கப்பட்ட ஆதனங்களால் வகுக்கும்போது வருவதாகும்.

ஆதன வியாபாரத்தின் திசையை அறியச் சிறந்தது நடுத்தர விலை.

உதாரணமாக ரொறொன்ரோவில் 2003ஆம் ஆண்டின் செப்ரெம்பரின் சராசரி ஆதன விலை (Average Price) $1,059,377 ஆகும். ஆனால், நடுத்தர விலை (Median Price) $850,000.



ஆனால், மேற்கண்ட இரண்டு விலைகளையும் 2024ஆம் ஆண்டின் விலை யுடன் ஒப்பிடும்போது சராசரி விலை 4.7%இனாலும், நடுத்தர விலை 3.5% இனாலும் குறைந்துள்ளதனைக் காணலாம். இதிலிருந்து அவதானிக்கக் கூடியது. நடுத்தரவிலையின் இறக்கம் குறைகின்றது. அதாவது இன்றைய காலத்தில் குறைந்த கீழ்நிலை விலையை அண்மித்து வருவதாகக் கொள்ளலாம்.

செப்ரெம்பர் 2025இல், 2025 ஓகஸ்ற் மாதத்துடன் ஒப்பிடும்போது, மாதாந்திர அடிப்படையில் வீட்டு விற்பனையும் உயர்ந்துள்ளது. ஆனால், விற்பனை அதிகரித்தாலும், விற்கப்படாத வீடுகளின் அளவு மேலும் உயர்ந்துள்ளது. TRREB செப்ரெம்பர் மாதம், 2025, 19,260 புதிய பட்டியலிடப்பட்ட வீடுகளைப் பதிவு செய்தது. இது கடந்த (2024) செப்ரெம்பர் மாதத்தைவிட 4% அதிகம். இருப்பினும் மாதந்தோறும் புதிய எண்ணிக்கை குறைந்துள்ளதாக TRREB குறிப்பிடுகிறது. இது சந்தையில் ஏற்படும் நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டுகிறது.

தற்போது GTA பகுதியில் ஆதனத்தின் சராசரிவிலை $1,059.377ஆகக் காணப்படுகின்றது. இது 2024 செப்ரெம்பருடன் ஒப்பிடும்போது 4.7% குறைவாக உள்ளது. ஆனால், நடுத்தர விலை 3.5% குறைவு. TRREB தலைமை தகவல் அதிகாரி ஜேசன் மெர்சர் (Jason Mercer) இந்நிகழ்வைப் பற்றிக் கூறியதாவது: "கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வீட்டு விற்பனை முன்னேற்றம் கண்டுள்ளதாலும் அது இன்னும் GTAயில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது சாதாரண நிலையை அடையவில்லை என்றார்.

இவர் மேலும் கூறுவது "கனடா வங்கி மேலும் இரண்டு முறை 0.25% என்ற கணக்கில் வட்டி விகிதத்தைக் குறைத்தால், வீடு வாங்குவோரின் சராசரி வருமானத்துடன் மாதாந்திரக் கடன் தவணைகள் கட்டுப்பாட்டிற்குள் வரலாம். இது வீட்டு விற்பனையையும் பொருளாதாரச் செயல்பாட்டையும் ஊக்குவிக்கலாம்".

விலைகள் குறைந்திருந்தாலும், GTA ஆதன வியாபாரம் அதிகரித்திருப்பதனை TRREB தெரிவிக்கின்றது. ஆதன வியாபாரம் செப்ரெம்பர் 2024உடன் ஒப்பிடும்போது 12% அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பு ஆதன வாடிக்கையாளர்களை மீண்டும் சந்தைக்குள் கொண்டு வந்ததாகக் கொள்ளலாம். மேலும் வட்டி வீத குறைப்பும் கனடிய மக்களிற்கு உத்வேகத்தைக் கொடுத்ததாகக் கொள்ளலாம். எனினும் குளிர்காலம் வருவதால் ஆதன வியாபாரம் எவ்வாறு இருக்கும் என்பதனை ஓரளவிற்குத் தீர்மானிக்கலாம். எனினும், உலக அரசியல் நிலைமையும் குறிப்பாக அமெரிக்க அதிபரின் செயல்பாடுகளும் ஆதனத் திசையை தீர்மானிப்பதில் கணிசமான அளவு செயல்படுவது என்பதனையும் கவனிக்க வேண்டும்.

ஒக்ரோபர் 29, 2025அன்று கனடிய மத்திய வங்கியின் குழு வட்டிவீதத்தை தீர்மானிக்க உள்ளது. Jason Mercer கூறியதுபோல மேலும் 0.25% குறைந்தால் ஆதன வியாபாரத்தில் மேலும் முன்னேற்றத்தைக் காணலாம்.

ரொறொன்ரோ பெரும்பாகத்தின் ஆதன சந்தை நிலவரம்




---

## பரபரப்புகளுக்குள்...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

இது அரசாங்கத்தின் நிறைவேற்றாத வாக்குறுதிகளை மறைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த செவ்வந்தி அலை சற்று ஓயத் தொடங்க அடுத்த அலை வெலிகமவில் ஆரம்பித்தது.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்கிரமசேகர அவரது அலுவலகத்திற்குள் வைத்து சுடப்பட்டார்.

இப்பொழுது அவரது பின்னணி, அவரைச் சுட்டுக் கொன்றவரின் பின்னணி அது பற்றிய விவாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மாறி மாறி பரபரப்புகள் பஞ்சம் இல்லாமல் வந்து கொண்டிருக்கின்றன.

இவை அனைத்தும் ஒரு கட்டமைக்கப்பட்ட ஒழுங்கில் இடம்பெறுவதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் இயலாமையையும் நிறைவேற்றாத வாக்குறுதிகளின் கனதியையும், அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தின் விளைவுகளையும் குறைப்பதற்காகவே இந்தப் பரபரப்புகள் தோற்றுவிக்கப்படுகின்றன.



அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலிருந்து தப்பிச்செல்ல முனைகிறது என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

ASSOCIATION OF SRI LANKAN GRADUATES OF CANADA
in partnership with
YORK REGION DISTRICT SCHOOL BOARD

GUIDANCE FOR HIGHER STUDIES

Career Information Workshop for High School Students (Gr. 9-12) & Parents/Guardians

Saturday, December 6, 2025
9:30 a.m. - 2:00 p.m
Milliken Mills High School
7522 Kennedy Road Markham, ON L3R 9S5

Admission: FREE

- Career Choices
- University/ College Selections
- Scholarships & Grant Applications
- Secondary School Course Selections

Meet professionals, seek advice, and step onto the path to success!



Scan Barcode to Register:

CONTACT INFORMATION:

Mayooran Somanathan: (647) 920-0106
Dr. V. Manivannan: (647) 949-5205
Suganja Sinnathamby : suganja.sinnathamby@yrdsb.ca
https://www.asgc.ca/

Partner Organizations
Center for Leadership and Innovation (CFLI)
Canadian Tamil Professional Association (CTPA)
Educators for Tamil Students' Success of YRDSB (ETSS)
Sri Lankan Accountants Association of Canada (SAAC)

# தமிழர் தம் பண்பாட்டில் பேச்சுக்கலையும் அதன் உலகமயமாதலும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## 1. அறிமுகம்

கலையும் கடவுளும் மனிதன் கண்டறிந்த மானிடப் பண்பாட்டின் மூலங்களாகும். மனித வாழ்க்கை நெறிமுறைகள் தொடரத்தக்க விழுமியங்கள் எல்லாமே இவ்விரண்டையும் சார்ந்து வளர்ந்தவை. தானிய சேமிப்பும், விலங்கு வளர்ப்பும், வேளாண்மையும், மீன்பிடியும், கைத்தொழிலும் மனிதன் ஓய்வின்போது கண்டறிந்த கலைகளோடும், கடவுளோடும், தொழில் நுட்பங்களோடும் மற்றும் குடும்ப உருவாக்கங்களோடும் இணைந்தே வளர்ந்தன. உலகில் பல மூலைகளிலும் சிதறி வாழ்ந்த கூட்டங்களின் வரலாறு இதைத்தான் கூறுகிறது. கூத்து மனிதர்கள் கால ஓட்டத்தில் கடவுளையும், கலைகளையும் பிணைத்தனர். நாடகம், இசைப் பாடல்கள், ஓவியங்கள், சிற்பங்கள், நாட்டியம் போன்ற பலவும் இவ்வாறே கட்டமைக்கப்பட்டன. உரையாடல்கள், பிரசங்கங்கள், உபந்நியாச உரைகள் போன்றன ஒலிமைய தொடர்பாடல் கலைகளாக கைமாற்றப்பட்டன. கல்வியாக நிலை நிறுத்தப்பட்டன. நெறிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டன. சமூக மாறுதல்கள், காலநிலை மாறுதல்களையொட்டி உருவாகின. சமூக மாறுதல்கள் கலைகளின் வடிவங்களையும் நோக்கங்களையும் போக்குகளையும் மாற்றின.

கலைகள் உணர்வு மைய வெளிப்பாடுகள், முகம், தொனி, உடல்வழியான அசைவுகள் வெளிப்பட்டன. அவற்றுக்குரிய பார்வையாளர்கள், ரசிகர்கள் வளர்ந்தனர். கால ஓட்டத்தில் அழகியலுடன் தொழில்முறைகளும் தொழில்நுட்பங்களும் கலைகளுள் அகலப்படுத்தின, செம்மைப்படுத்தின.

கலை வாழ்க்கை, கலைஞர்கள், கலைச்சமூகம் என்பனவும் வளரத் தலைப்பட்டன. அரசியல், பொருளாதாரம், சமூகவியல்போல கலையும் பண்பாட்டுடன் பிணைந்து நெடுவளர்ச்சி பெற்றது.

ஒலியும், அதன் உச்சமும், உணர்வுகளும் அவைசார்ந்த வெளிப்பாடுகளும் பல்வேறு கலைகளாகின. உரையாடல், பேச்சுக் கலை என்பனவும் இவ்வாறுதான் வளர்ந்தன. செய்யுள் மொழி பின்பு பேச்சுத் தமிழ்க்கலையாக வளர்ச்சி பெற்றது.



மக்களது புலம் பெயர்தல் வாழ்வு என்பது புதிய அனுபவங்களையும் புதிய கலை வடிவங்களையும் உருவாக்க உதவியது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி பேச்சுக் கலையின் கேட்போர் பரப்பை விரிவுபடுத்தியது. புதிய மின்னியல், முகநூல், தொடர்பாடல் வளர்ச்சி பேச்சுக்கலையை இராட்சச வேகத்தில் உலகமயப்படுத்தல் ஆயிற்று.

புகழ்பெற்ற பேச்சுக்கள் பலவும் நூலுருவம் பெற்று படைப்பிலக்கியமாக நின்று நிலைக்கின்றன. மகாத்மா காந்தி, பாரதியார், அம்பேத்கார், ஈ.வே.ரா. பெரியார், அண்ணாத்துரை ஆகியோரது பேச்சுக்கள் இவ்வாறு உன்னதமான சமூக, பண்பாட்டு, அரசியல் படைப்புக்களாகி புகழ் பரப்பி நிற்கின்றன.

## 2. பேச்சுக்கலை

இயற்றமிழ் பரப்பின் இதயம் தென்றல் பேச்சுக்கலைதான்.

அரங்கக்கலைகளில் பேச்சுக்கலை தனித்துவம் மிக்கது. உரையாடல்களும், விவாதங்களும், மேடைப் பிரசங்கங்கள், கதாப்பிரசங்கங்கள் என விரிவு பெற்றன.

மனிதர்களிடையிலான உரையாடல்கள் பல நிலைகளில் தனித்துவம் பெற்றன. காவிய நாயகர்களிடையிலான உரையாடல்கள் இலக்கிய மதிப்பையும் பண்பாட்டு உயிர்ப்பையும் வெளிப்படுத்தின.

மகாபாரதத்தில் யுத்தகளத்தில் மகா விஷ்ணு கிருஷ்ணன், அர்ச்சுனனுடன் நடத்தும் உரையாடல் மனிதர்களது கடமை பற்றிய தர்மத்தை நிலை நிறுத்துவதாய் அமைந்தது. பண்பாட்டின் குரலாகவும் மகிமை பெற்றது. கீதோபதேசம் உன்னத உரையாடல்தான்.

குறுந்தொகைப் பாடலான 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி' எனத் தொடங்கும் பாடலை மையப்படுத்தி நக்கீரனுக்கும் இறைவன் சிவபெருமானுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடல் கூட ஒப்புமையற்ற மொழியாகவும்இலக்கியமாகவும் கொண்டாடப்படுகிறது. புலவனுக்கும் இறைவனுக்குமான தமிழ்ப்பண்பாட்டின் சமத்துவ மாண்பைக் காட்டும் அதன் அழகே அழகுதான். உரையாடல் பேச்சுக் கலையின் மெல்லிய வடிவமாகும்.

மேடைப்பேச்சு என்பது அறிவு நிறைந்த சான்றோர் உரையைக் கேட்பதற்கு ஆசைப்படும் பெருங்கூட்டத்தினருக்கு, புலமையாளன் ஒருவன் தனது அறிவையும், தெளிவையும், உணர்வையும் தர்க்க ஆற்றலோடும் மொழி வளத்தோடும் இணைத்து ஒரு விடயத்தை பேசுதலாகும். ஒலி வடிவ இலக்கியம் இது. எளிமையான மொழிநிலை ஆற்றுகைக் கலை இது.

பேசும் சான்றோன், பேசும் விடயம், பேசும் முறை, சபையோர் பேசுபவரிடையிலான மொழிவழி, ஒலிவழிப் பிணைப்பு என்பன பேச்சுக்கலையின் கூறுகளாகும்.

பேச்சாளர் பேசும்முறை, தொனியின் கவர்ச்சி, சொற்களின் இனிமை, விடயம் பற்றிய ஈர்ப்பு என்பன முக்கியமானவை.

பேச்சாளர் நிற்கும் நிலையும், முகவெளிப்பாடும் குரலும், சொல்லும், ஒலிபேதங்களும் கேட்போரைக் கட்டிப் போடும்போது பேச்சுக்கலை உன்னதம் பெறுகிறது.

பேச்சுக்கலையின் வெற்றி சபையோர் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. சபையில் இருப்போர்தான் ஆதார சக்தி. அவர்களை மையப்படுத்தியே பேச வேண்டும் சபையோரைப் புரிந்துகொண்டு பேசவேண்டும். கேட்போர் மகிழ்ச்சி நீடிக்கும் வரையே பேச்சாளரால் பேச முடியும். அவர்களைப் புரிந்துகொண்டு பேச்சை நிறுத்த வேண்டும். அதுவரை பேச்சின் உள்ளடக்கத்திலும் ஒலி பேதங்களிலும், உற்சாகத்திலும், முக வெளிப்பாட்டிலும் தளர்ச்சி ஏற்படுதல் கூடாது. பேச்சாளர்களது தன்னம்பிக்கையின் நிறைநிலைதான் மேடைப்பேச்சின் வெற்றி. இதை உணர்ந்து பேசும் பேச்சாளரின் பேச்சுக்கள் சாகாவரம் பெறுகின்றன.

## 3. வள்ளுவரும் பேச்சுக்கலையும்

பேச்சுக்கலைஞர்களிடம் சிறந்து நிலைக்க வேண்டியதிறன் சொல்வன்மை அல்லது நாவன்மை என்பதுதான்.

கேட்டார் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் (643)



கேட்பவர்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும், கேளாதவர்களைக் கேட்குமாறு செய்வதும்தான் நாவன்மை என்கிறார் திருவள்ளுவர்.

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்து இனிது
சொல்லுதல் வல்லாரப் பெறின் (648)

பேசுபவர்தாம் சொல்வதை இனிமையாகச் சொல்ல வேண்டும் அவ்வாறு பேசுபவரது பேச்சை உலகம் அதிக ஆர்வத்தோடு கேட்கும் என தெளிவுப் படுத்துகிறார் வள்ளுவர்.

இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது
உணர விரித்து ரையாதார் (650)

தாம் கற்றதைப் பிறர் புரிந்துகொள்ளும் வகையில் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள் எவ்வித மணமும் இல்லாத மலர்களைப் போன்றவர்களே என்றும் பேச்சின் அடிப்படை இயல்பை வலியுறுத்துகிறார்.

பேச்சின் வீரியம் என்பது அவையோரின் ஆர்வத்திலும் தாகத்திலுமே தங்கியுள்ளது. பேசுபவர் சொல்லும் தொடரின் தன்மையை அறிந்துக் கொள்ள வேண்டும். தூய்மை மிக்க சபையோர் இயல்பை அறிய வேண்டும். இவற்றுக்கு ஏற்ப நன்கு ஆராயந்துதான் பேச வேண்டும் எனக் கற்பிக்கிறான் வள்ளுவன்.

அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகை அறிந்த தூய்மையவர் (711)

பேச்சாளர் எப்போதும் சொற்களின் நடைமுறை பற்றி அறியவேண்டும், பேசும் வேளையை அறிய வேண்டும், பேசும் விடயத்தை நன்கு உணர்ந்து, தெளிவு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



# நானிலம் போற்றும் நட்பு - 76



- அகணி -
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான கார் நாற்பது நூலில் மதுரைக் கண்ணங்கூத்தனார் எழுதியுள்ள பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளை இந்த இதழில் உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையின் உதவியோடும், உரையாசிரியர் ந.மு.வேங்கடசாமிநாட்டார் அவர்களின் உரையின் உதவியோடும், உரையாடுவோம். நூலாசிரியர் கண்ணங்கூத்தனார் அவர்களின் பெயரில் உள்ள கூத்தனார் என்பது இவர் இயற்பெயர். கண்ணன் என்பது இவர் தந்தையார் பெயர். இவர் வாழ்ந்த ஊர் மதுரை.

அகப்பொருள் பற்றிய பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் சிறியது கார் நாற்பது. கார் காலத்தின் தோற்றம் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படுகின்றமையாலும், நாற்பது செய்யுட்களை உடையமையாலும், இது கார் நாற்பது என்னும் பெயர் பெற்றது. எனவே இது காலம் பற்றிய தொகை நூலாகும். இந்த நூலில் உள்ள செய்யுட்கள் அகத்தின் பகுதியாகிய முல்லைத் திணை சார்ந்தவை.

முல்லையாவது ஒரு தலைமகன் தனக்குரியவனை ஒரு நிமித்தத்தாற் பிரிந்து சென்றவழி பார்த்து வருந்துவதும் தலைமகள் அவன் கூறிய சொற் பிழையாது கற்பால் ஆற்றியிருத்தலாம். வேந்தற்குத் துணையாகப் போர்புரியச் சென்ற தலைமகன் “கார் காலத்து மீண்டு வருவேன்” எனக் காலங்குறித்துப் பிரிந்ததால், தலைவி அவனுக்காகக் காத்திருத்தலையும் அப்பருவம் வந்தும் தலைவன் வராததால் கவலையுறும் தலைவியை தோழி ஆற்றுதலையும் இந்தச் செய்யுட்களில் காணலாம். இதில் முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளும் முதற்பொருளும் அன்றிக் கருப்பொருளிலும் பல கூறப்பட்டுள்ளன. தோழி தலைவியை ஆற்றுகின்ற நிலைமையைக் கவனிக்கும்பொழுது நட்பின் பெருமை நன்கு புலனாகின்றது. இப்பொழுது பாடல் 1இனைக் கவனிப்போம். இந்தப் பாடலில் தோழி தலைவன் வரவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை தலைவிக்கு எடுத்துக் கூறுகின்றாள்.

“பொரு கடல் வண்ணன் புனை மார்பில் தார்போல்,
திருவில் விலங்கு ஊன்றி, தீம் பெயல் தாழ,
‘வருதும்’ என மொழிந்தார் வாரார்கொல், வானம்
கரு இருந்து ஆலிக்கும் போழ்து?”

திருவில் என்பது இந்திரவில்லை என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். கரையை மோதுங்கடலினது நிறத்தினை உடைய திருமால் மார்பில் அணிந்த பூமாலைபோல, இந்திரவில்லைக் குறுக்காக நிறுத்தி இனிய பெயல் விழா நிற்க, வருவேன் எனச் சொல்லிப்போன தலைவர், மேகமானது கருத்து மழை பொழியும் காலத்து வாராரோ? என்று தோழி தலைவியிடம் கூறினாள். இப்பொழுது பாடல் 2இனைக் கவனிப்போம்.

“கடுங் கதிர் நல்கூர, கார் செல்வம் எய்த,
நெடுங் காடு நேர் சினை ஈன, - கொடுங்குழாய்!-
“இன்னே வருவர், நமர” என்று எழில் வானம்
மின்னும், அவர் தூது உரைத்து”.

நெடுங்காடு என்பது நெடிய காடு என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். “வளைந்த குழையையுடையாய், சூரியனின் வெங்கதிர் குறைந்து, கார்பருவம் துவங்கி, நெடிய காடெல்லாம் மிக்க அரும்புகளைத் தர, நமது தலைவர் இப்பொழுதே வருவார் என்று மேகம் தூது அறிவித்தது என்று தோழி தலைவியிடம் கூறினாள்”.

இயற்கை அசைவுகளை உற்று நோக்கி தோழி தலைவிக்கு தலைவன் வரவேண்டிய பருவம் வந்துவிட்டது என்கிறாள். தலைவிமீது தோழி கொண்டுள்ள அக்கறையை வெளிக்காட்டுவதால் நட்பின் பெருமைக்கு எடுத்துக்காட்டு. இப்பொழுது பாடல் 3இனைக் கவனிப்போம்.

“வரி நிறப் பாதிரி வாட, வளி போழ்ந்து. அயிர் மணல் தண் புறவின் ஆலி புரள,
உரும் இடி வானம் இழிய, எழுமே- நெருநல், ஒருத்தி திறத்து”.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். தண் என்பது குளிர்ச்சி என்றும், அயிர் மணல் என்பது இள மணல் என்றும், ஆல என்பது ஆலங்கட்டி என்றும், உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். “வரி நிறத்தினை உடைய பாதிரிப் பூக்கள் வாட, இள மணலையுடைய குளிர்ந்த காட்டில், ஆலங்கட்டிகள் புரள, வானம் இடி இடித்து, நேற்று முதல், ஒருத்தி தனித்திருப்பதால், அவளை வருத்துவதற்காக மழை பெய்தது”. இந்தப் பாடலில் தலைவியின் தனித்திருத்தலுக்கேற்ப இயற்கையின் செயற்பாடு அமைவதாகக் காட்டப்பட்டுள்ளது.

இப்பொழுது பாடல் 4இனைக் கவனிப்போம். இந்தப் பாட்டில் தலைவன், தலைவி சேருவதற்கான பருவம் வந்துவிட்டது என்பதைத் தோழி எடுத்துக் கூறுகின்றாள்.

“ஆடு மகளிரின் மஞ்ஞை அணி கொள,. காடும் கடுக்கை கவின் பெறப் பூத்தன
பாடு வண்டு ஊதும் பருவம்,-பணைத் தோளி!- வாடும் பசலை மருந்து”.

